**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**நாள் 16.07.2025**

**அசல் வழக்கு எண்கள். 182/2011**

**பி.வா.சா.1 – ஆனந்தன், த/பெ.**கிருஷ்ணசாமி

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

இந்த வழக்கில் தாக்கல் செய்த ஆவணம் ஒன்றினை நீங்கள் படித்து பார்த்தீர்களா என்றால் இதுவரை படித்து பார்க்கவில்லை. அந்த ஆவணத்தில் இரண்டு சொத்துக்கள் உள்ளன ஆனால் நீங்கள் ஒரு சொத்துக்கு மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் **40** அண்ணா தெருவில் உள்ள வீட்டுக்கு மட்டும் தான் வாதி போட்டுள்ளார். ராகவாச்சாரியாருக்கும் லஷ்மி பாய் என்பவருக்கும் எந்த ஆண்டிலிருந்து தொடர்பு என்றால் எனக்கு **1975** இல் இருந்து தெரியும். அதற்கு முன்பு உங்களுக்கு அவ்வளவாக விவரம் தெரியாது என்றால் சரிதான். சொத்து லட்சுமிபாய் அவர்களுக்கு வந்ததற்கான ஆவணம் ஏதேனும் பார்த்தீர்களா என்றால் அது லட்சுமிபாய் அம்மையார் அவர்களின் பரம்பரை சொத்து. **09.03.1932** லட்சுமிபாய் அம்மையார் என்பவர் ஒரு கோவிந்தராஜ் முதலியார் என்பவரிடமிருந்து மேற்படி தேதியில் கிரையப்பத்திரம் முன்னிலைக்கு கிரயம் வாங்கியதாக கண்டுள்ளது அந்த விவரம் உனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் பூர்வீகம் தெரிந்து கொள்ளாமல் வாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளார் நீங்களும் அதையே வழிமொழிகிறீர்கள் என்றால் சரியில்லை. வாதியானவர் அவரது குறுக்கு விசாரணையில் அவர் என்ன சாட்சியம் அளித்தார் என்கிற விவரத்தை நீங்கள் தெரிந்து கொண்டீர்களா என்றால் தெரியாது.உங்களிடம் காட்டப்படுகின்ற **13/7/2008** தேதியிட்ட வீட்டை விட்டு ரூபாய் **1,25,000** பெற்றுக்கொண்ட ரசீதில் உள்ள கையொப்பம் உங்களுடையது என்று சொன்னால் சரி இல்லை அது என்னுடைய கையொப்பம் இல்லை. வீடு விற்ற விவரம் உங்களுக்கு எப்படி தெரியும் என்றால் வீடு இடிக்கும் பொழுது தான் எங்களுக்கு தெரியும். எந்த ஆண்டு இடித்தார்கள் என்றால் **2008** என்று நான் நினைக்கிறேன். உங்கள் அப்பா அந்த வீட்டை இடித்தாரா என்றால் இடிக்கவில்லை. **2008** ஆம் ஆண்டு அவ்வாறு இடிக்கும் பொழுது எங்களுடைய வீட்டை ஏன் இருக்கிறீர்கள் என்று மூன்றாம் நபர்களை பார்த்து நீங்கள் ஏதேனும் கேட்டீர்களா என்றால் அவர் யார் என்று எனக்குத் தெரியாது நான் எப்படி அவரிடம் கேட்க முடியும். அவர் யார் என்று எனக்குத் தெரியாது

நான் எப்படி அவரிடம் கேட்க முடியும். நான் கேட்கவில்லை. உங்கள் அப்பா உங்கள் மீது உள்ள அன்பினால் பாசத்தினாலும் வீட்டை விற்ற பணத்தை அனைவருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள் என்றால் சரியில்லை. பிள்ளைகள் மனைவி மகள் அனைவருக்கும் பகிர்ந்து கொடுத்தார் என்றால் சரியில்லை. உங்களுக்கு பணம் கொடுத்தாரா என்றால் யாருக்கு பணம் கொடுத்தார் என்று தெரியாது. எனக்கு பணம் கொடுக்கவில்லை. சகோதரர்கள் அனைவருக்கும் **1,25,000** கொடுத்தார்கள் என்றால் சரியில்லை உங்கள் தாயாருக்கு கௌசல்யாவுக்கு ஒரு லட்சம் கொடுத்தார் என்றால் சரியில்லை சகோதரி சுமதி என்கிற மரகதவல்லிக்கு ரூபாய் நாற்பதாயிரம் கொடுத்தார் என்றால் சரியில்லை. முதல் பிரதிவாதியான உங்கள் தந்தை என்ன எதிர்வாதம் செய்து வழக்கு நடத்துகிறார் படித்து பார்த்தீர்களா என்றால் படித்து பார்க்கவில்லை. உங்கள் அப்பாவின் முகவரி என்ன என்றால் **13** மேட்டுப்பாளையம் தெரு, காஞ்சிபுரம் என்றால் சரிதான். வாதிகள் தாக்கல் செய்த ஆவணம் **6** உள்ள கடிதத்தில் நம்பர் **6** ஸ்ரீரங்க ராஜ வீதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் அந்த இடத்தில் வசிக்கவில்லை என்றால் எங்கே போனார் என்று எனக்கு தெரியாது. உங்கள் அப்பா **13** மேட்டுப்பாளையம் தெரு காஞ்சிபுரத்தில் தான் வசித்து வந்தார் அது தெரிந்தே வேறு முகவரிக்கு கடிதம் அனுப்பி உள்ளார்கள் என்றால் சரியில்லை. வாதிகள் தாக்கல் செய்த ஆவணம் **2**ல் ஆவணத்தில் **13** மேட்டுப்பாளையம் தெரு என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஜோசியர் ராகவாச்சாரியார் வழக்கு ஆவணம் ஒன்று மூலம் லட்சுமி பாய் எழுதி வைத்த செட்டில்மெண்ட் முன்னிலைக்கு உங்கள் தாத்தா ஜோசியர் ராகவாச்சாரியாருக்கு உரிமை பாத்தியம் கிடைத்ததால் அவர் **1983**இல் எந்த ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்து விட்டதால் அவர் ஏக வாரிசான ஒரே மகன் முதலாம் பிரதிவாதி கிருஷ்ணசாமிக்கு இந்த சொத்து தனிப்பட்ட வகையில் கிடைக்கப்பெற்ற சொத்து என்றால் சரியில்லை. அவருக்கு தனிப்பட்ட சொத்து என்கிற காரணத்தினால் உங்களுக்கு வாரிசு என்கிற அடிப்படையில் சொத்தில் கூட்டு சுவாதீனம் எதுவும் கிடையாது கூட்டு உரிமை எதுவும் கிடையாது என்று சொன்னால் சரி இல்லை. ஆகவே வழக்கு செல்ல தக்கது அல்ல என்றால் சரியில்லை. கூட்டு சுவாதி எனும் என்று நீங்கள் தவறாக கூறி நீதிமன்ற கட்டணம் செலுத்தாமல் நீதிமன்றத்தை ஏமாற்றி உள்ளீர்கள் என்றால் சரியில்லை. இந்த வழக்கில் முதல் பிரதிவாதி இந்த சொத்தினை பற்றி கந்தசாமிக்கு ஒரு பவர் பத்திரம் எழுதிக் கொடுத்து அந்த பவர் பத்திரம் முன்னிலைக்கு அஜித்குமார் என்பவருக்கு மீண்டும் ஒரு பவர் பத்திரம் எழுதிக் கொடுத்து மேற்படி அஜித்குமார் என்பவர் நாலாம் பிரதிவாதி சுகன்ராஜ் என்பவருக்கு

கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்து பிறகு **11**ஆம் பிரதிவாதி நரசிம்மனுக்கு தான் கிரயம் செய்த கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். வாதிகள் தாக்கல் செய்த வழக்கின் உங்கள் தகப்பனார் முதல் பிரதிவாதி கந்தசாமிக்கு ஒரு பவர் பத்திரம் எழுதிக் கொடுத்து பின்னிட்டு கந்தசாமி அவர்கள் **3**ஆம் பிரதிவாதி அஜித் குமார் என்பவருக்கு மூல பத்திரம் எழுதி கொடுத்து அஜித்குமார் நான்காம் பிரதிவாதி சுகன்ராஜ் அவர்களுக்கு ரூபாய் **20** லட்சத்திற்கு ஒரு கிரைய ஒப்பந்தம் எழுதிக் கொடுத்து எந்தவித ஆவணமும் இல்லாமல் **11** ஆம் பிரதிவாதிக்கு தான் நரசிம்மன் என்பவருக்கு தான் கிரயம் பெற்றுள்ளார் ஆகையால் வாதிகள் கூறியுள்ள வழக்கில் பிரதிவாதிகள் கிரயம் பெற்றது போல் வழக்கில் சொல்லி உள்ளது முற்றிலும் தவறானது என்றால் சரி இல்லை. ஆகவே வழக்கின் உரிமையாளர் **11** ஆம் பிரதிவாதி மட்டுமே என்று சொன்னால் சரி இல்லை. வாதிகள் இதனால் வரை வழக்கினை திருத்தி தகுந்த பரிகாரம் **11** ஆம் பிரதிவாதி பேரில் போடப்படாததால் வழக்கு செல்லத்தக்கது அல்ல வழக்கு மூலம் முற்றிலும் மாறுபட்டதாகும் என்றால் சரியில்லை. ஆகவே கிருஷ்ணசாமி அவர்களின் வாரிசுகளான மனைவி மகள் மற்றும் மகன்களுக்கு ஆகியோருக்கு இந்த சொத்தில் பாக உரிமை பாத்தியம் கேட்க உரிமை இல்லை என்றால் சரியில்லை. ஆகவே வழக்கினை சரியான முறையில் தாக்கல் செய்யாததால் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.